**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**முதன்மை சார்பு நீதிபதி**

வா.சா. 1 தேதி.03.01.2024

| OS.No. | 473/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | கீர்த்தி வாசன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 07.12.1894–ல் சிங்கார பிள்ளை அவர்களுக்கு பொன்னுசாமி படையாட்சி எழுதிக் கொத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 26.09.2019–ல் மயிலாடுதுறை நகராட்சி வழங்கிய சொத்து வரி ரசீது வா.சா.ஆ. 2. 05.10.2015–ல் மயிலாடுதுறை நகராட்சியால் வழங்கப்பட்ட வரைபடம் வா.சா.ஆ. 3 05.10.2017–ல் மயிலாடுதுறை நகராட்சி வழங்கிய திட்ட அனுமதி உத்தரவு மற்றும் திட்ட அனுமதி உத்தரவு வா.சா. ஆ. 4, 5. நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நகல் வா.சா.ஆ.6. வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தினை பார்வையிட்டு வழங்கிய முதல் நிலை அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1, 2. வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தினை பார்வையிட்டு வழங்கிய இறுதிநிலை அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ 3, 4. நில அளவையர் வழங்கிய அறிக்கை மற்றும் வரைப்படம் நீ.ம.சா.ஆ. 5, 6. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.